

**1. அனுமதி (PERMISSION) - "நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?"**

உன் வாழ்வில் இதுவரை உள்ள நிகழ்வுகளில், மிகவும் மிகழ்ச்சிகரமானதாக உன் ஞாபகத்தில் இருப்பது எது? என் வாழ்வில் உள்ள மிக மகிழ்ச்சிகரமான நினைவினை நான் பகிர்ந்துகொள்ளலாமா?



**2. B.C. - கிறிஸ்துவுக்கு முன் (BEFORE CHRIST)**

இந்த வாக்கியத்தை மூன்று வார்த்தைகள் அல்லது சொற்றொடர்களில் நிறைவு செய்.

"என் வாழ்க்கையில் ஒரு காலக்கட்டத்தில்..."

1.________________ 2. ________________ 3. ________________



**3. T.P. - திருப்பு முனை (TURNING POINT)**

1. இயேசுவைக் குறித்து எப்படி கேள்விப்பட்டாய்? "அதன்பின் ஒரு நாள்..."

   ____________________________________________________

2. இந்த வாக்கியத்தை நிறைவு செய்: "இயேசு என்னுடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதையும் மீண்டும் உயிர்த்தார் என்பதையும் நான் உணர்ந்தபோது, நான் அவரை அழைத்து..."



**4. A.D. - தீர்மானத்திற்குப் பின் (AFTER DECISION)**

உன்னுடைய வாழ்வில் இயேசு செய்த 3 நல்ல காரியங்கள் என்ன? "இயேசுவை சந்தித்த நாளில் இருந்து நான்..."

1. ____________________________________________________
2. ____________________________________________________
3. ____________________________________________________



**5. இயேசுவை நான் சந்தித்திராவிட்டால், நான்... ("IF I HAD NEVER MET JESUS, I...")**

கிறிஸ்து இல்லாவிட்டால் உன் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்திருக்ககூடும்?

____________________________________________________

# tamil.ONEMINUTEWITNESS.org

## (TAKING IT FURTHER …)

## இன்னும் தொடர்ந்து எடுத்துச் செல்லுதல்...

உன்னுடைய ஒரு நிமிட சாட்சியை பகிர்ந்துகொண்ட பிறகு, அவர்கள் பரலோகத்திற்க எப்படி நிச்சயமாக செல்லமுடியும் என்பதைக் குறித்து அறிந்துகொள்ள விரும்புகிறார்களா என்ற கேள்வியை அவர்களிடம் நீ எழுப்பலாம். அவர்கள் ‘ஆம்’ என்பார்களானால், இரட்சிப்பிற்கான படிகளைப்பற்றி அவர்களிடம் எடுத்துச்சொல்.

‘1’ - **ஒத்துக்கொள்ள வேண்டும் (ADMIT):** நான் தவறு செய்திருக்கிறேன், என்னுடைய பாவம் பரிசுத்த தேவனிடமிருந்து என்னை பிரித்திருக்கிறது (ரோமர் - 3:23) என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்.

‘2’ - **விசுவாசிக்க வேண்டும் (BELIEVE):** இயேசுகிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்து, மீண்டும் உயிரோடு எழுந்து, தாம் ஒன்றான மெய் தேவன் என்று நிரூபித்துள்ளார்" (ரோமர் - 10:9,10) என்பதை விசுவாசிக்க வேண்டும்.

‘3’ - **அறிக்கையிட வேண்டும் (CONFESS):** இயேசுவிடம் பாவத்தை எல்லாம் அறிக்கையிட்டு, இயேசுவே என்னை மன்னியும் என்று கேட்பதோடு அவரையே என்றென்றைக்கும் தங்கள் தலைவராகவும், ஆண்டவராகவும் இருக்கும்படியும் கேட்கவேண்டும் (I யோவான் 1:9).

இந்த படிகளை அவர்கள் புரிந்திருப்பார்கள் எனில், பின்னர் இந்த கேள்வியை கேளுங்கள்: இன்று இயேசு உங்கள் பாவங்களை மன்னிக்கும்படியாகவும், உங்கள் வாழ்வில் தலைவராகவும் அவர் வரும்படி அவரிடம் கேட்க விரும்புகிறீர்களா?

### இரட்சிப்பின் கவிதை

இயேசுவே, நீர் சிலுவையில் மரித்தீர்
உயிரோடு எழும்பினீர் என்னை மீட்கவே
என் பாவம் எல்லாம் இப்போ மன்னியும்
கர்த்தராய், மீட்பராய், நண்பராய், என்னில் வாரும்
என் வாழ்வை மாற்றி புதிதாக்கும்
கர்த்தரே, அருள் செய்யும் உமக்காய் வாழ

The Salvation Poem,
Written by Matt and Sherry McPherson
©2004 by The Salvation Poem Foundation, Inc.
ALL RIGHTS RESERVED.
www.thesalvationpoem.com

**GIFTS AT:**
**OASISGIFTS.ORG.**

**BOOKS**
**MUSIC**
**& TOOLS**
*TO INSPIRE YOUR WITNESS!*



oasisgifts.org

### உங்கள் கதையை நிறைவு செய்தல்...

உங்களோடு அவர்கள் ஜெபம் செய்ய விரும்பினால், நீங்கள் சொல்லுகிற ஜெபத்தை உங்கள் பிறகாலே சத்தமாக, இப்போது கற்ற படிநிலைகளுக்கு ஏற்றவோறோ அல்லது மேலே உள்ள கவிதையின் அடிப்படையிலோ ஜெபிக்க வையுங்கள்.

"அன்புள்ள இயேசுவே, நான் தவறு செய்ததை **ஒத்துக்கொள்கிறேன்,**
என்னுடைய பாவத்திற்காக மனம் வருந்துகிறேன்.
தயவாய் என்னை மன்னியும். என் பாவங்களுக்காக நீர்
மரித்து மீண்டுமாய் உயிரோடு எழுந்தீர் என்பதை **விசுவாசிக்கிறேன்.**
என்னுடைய பாவத்தை உம்மிடம் **அறிக்கை செய்து**, நீர் என் வாழ்வில்
ஆண்டவராக இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். உம்மை நேசிக்கிறேன் இயேசுவே! ஆமென்".

அவர்கள் ஜெபித்து முடித்தப்பின்னர் அவர்களை வாழ்த்துங்கள். பின்னர் 3 காரியங்களை அவர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்: தினமும் வேதம் வாசிப்பது, தினமும் ஜெபிப்பது, பரிசுத்த வேதத்தை விசுவாசிக்கும் சபையைக் கண்டறிந்து ஒவ்வொரு ஞாயிறன்றும் அங்கு செல்வது. அதன் பின் அவர்களை உங்களுடைய புதிய நண்பர்களில் ஒருவராக சேர்த்துக் கொள்ளுங்கள்.

**"அன்புள்ள இயேசுவே, நான் பிறருக்கு உதவி செய்ய இன்று என்னை தயவாய் பயன்படுத்தும்"**

Use this as a MASTER Copy for you to reproduce for training others in your Church and Community.
© Oasis World Ministries PO Box 58 Champlin, MN 55316 info@oneminutewitness.org.